**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**

**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**C.C. No: 258/2025**

**Dated: 26.05.2026**

**Deposition of Witnesses for PW - 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **திரு.கார்த்திக் செல்வம்** | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Tmt.Deepika,Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023

**எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verified with their identity card. Aathar card of the Witness verified.**

**முதல் விசாரணை**

நான் தற்போது NCB field Office, Madurai-ல் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு NDPS சட்டம 1985ன்கீழ் தேடுதல், பறிமுதல், கைது மற்றும் புலன் விசாரணைக்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. நான் கடந்த 13.04.2025-ம் தேதி NCB field Office, Madurai-ல் அலுவலில் இருந்தபோது சென்னை அலுவலகத்தில் பணிபுரியும் சார்பு ஆய்வாளர் திரு.ஜீபின்சாம் என்பவர் அவருக்கு ரகசிய தகவலாளி மூலம் கிடைத்த ரகசிய தகவலை பெற்று சென்னை அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரியும் திரு.தீபக்கௌசிக் என்பவருக்கு சமர்ப்பித்துள்ளார். அவர் அந்த ரகசிய தகவலை சார்பு ஆய்வாளராகிய என்னை NDPS சட்டத்தின்படி தேடுதல், பறிமுதல், கைது ஆகியவை மேற்கொள்ள வேண்டியும்

எனது தலைமையின் கீழ் ஒரு அணியை தயார் செய்ய வேண்டி உத்தரவிட்டார். நான் அந்த உத்தரவை ஏற்று எனது அணியை தயார் செய்தேன். அந்த ரகசிய தகவலானது என்னவென்றால் சுமார் 32 வயது மதிக்கத்தக்க அலெக்ஸ் த/பெ.மகாலிங்கம், எண்.3/364, பட்டி ரோடு, விழுந்தமாவடி, கீழ்வேளூர் தாலுகா, நாகப்பட்டினம் என்பவர் TN 51 BA 0007 என்ற பதிவெண் கொண்ட கொயடோ Camry என்ற வாகனத்தில் வந்து பெருமளவு மெத்தபெட்டைமைன் என்ற போதை பொருளை புதுக்கோட்டை To மதுரை செல்லும் ரோட்டில் மேலவிலாகுடி, பாரதிநகர் எதிரே 13.04.2025-ம் தேதி சுமார் 20, 30 மணியளவில் வந்து வாங்க வருகிறார் என்பதாகும். நான் எனது அணியுடன் பறிமுதல் நடவடிக்கைக்கு தேவையான உபகரணங்களை தயார் செய்து மதுரையிலிருந்து புதுக்கோட்டைக்கு புறப்பட்டு சென்றேன். பின்பு அன்றைய தினம் புதுக்கோட்டை வந்து 20.00 மணியளவில் ஆட்டங்குடி, கவிநாடு கிழக்கு சர்க்கில் VAO திருமதி.மாரிக்கண்ணு மற்றும் கிராம உதவியாளர் ரவி ஆகியோர்களை போனில் தொடர்பு கொண்டு 20.15 மணியளவில் VAO அலுவலகம் வருமாறு கூறினேன். அவர்கள் இருவரும் சுமார் 20,30 மணியளவில் VAO அலுவலகம் வந்து சேர்ந்தனர். நான் அவர்களிடம் எனது அடையாள அட்டையை காண்பித்து என்னை அவர்களிடம் அறிமுகம் செய்தும் மேலும் எனது அணியில் உள்ள நபர்களையும் அவர்களது அடையாள அட்டையை காண்பித்து அறிமுகம் செய்து வைத்தேன். பின்பு என்னிடம் இருந்த ரகசிய தகவலை அவர்களிடம் எடுத்து கூறி NDPS சட்டத்தின்கீழ் நான் எடுக்கவிருக்கும் கீழ்கண்ட நடவடிக்கைகளுக்கு சாட்சிகளாக இருக்குமாறு கேட்டு கொண்டேன். அதற்கு அவர்கள் இருவரும் ஒப்புக் கொண்டு சம்மதம் தெரிவித்தனர். நான் தேடுதல் மற்றும் பறிமுதல் நடவடிக்கை மேற்கொள்வதற்கு

முன்பாக என்னையும் எங்களது அணியுள்ள நபர்களையும் சோதனை செய்து கொள்ளுமாறு VAO மற்றும் அவரது அலுவலக உதவியாளர் (Village assistant ) ஆகியோர்களிடம் கூறினேன். அதற்கு அவர்கள் சோதனை செய்ய விரும்பவில்லை என்று மறுப்பு தெரிவித்து விட்டனர். மேலும் நான் கொண்டு வந்திருந்த DD Kit, NCB Seal No.12, Laptop. போட்டபில் பிரிண்டர் மற்றும் போட்டபில் வெயிட் மிஷன் மற்றும் Stationery Item அடங்கிய Kit Bag ஐ அவர்களிடம் காண்பித்தேன்.

**(சாட்சியின் சுகவீனம் காரணமாக அரசு வழக்கறிஞர் கோரிக்கையினை ஏற்று சாட்சியின் சாட்சியம் முதல் விசாரணையில் பகுதியாக ஒத்தி வைக்கப்படுகிறது.)**

திறந்த நீதிமனறத்தில் சாட்சி மற்றம் அவரது வழக்குநர்
முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு
சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு
சாட்சியிடம் படித்துக் கட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு
சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது .

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,
புதுக்கோட்டை.